## ஜூலை - 30

**"திராட்சைத் தோட்டங்களைக் கெடுக்கிற குழி நரிகளையும் சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள்"**

**- உன்னத 2 : 15**

இவ்விதமாக ஜாக்கிரதையாயிருப்பதும், பொதுவாக உலகத்தார் நடத்துகிற ஜீவியத்துக்கு இவ்வளவு வேறுபாடான" ஒரு ஜீவியத்தின் பிரயோஜனம் தான் என்ன? என்று கேட்டு, அநேகர் தங்களுடைய பிரதிஷ்டையின் பொருந்தனைகளின் சிறு மீறுதல்கள் சம்பந்தமாக அசட்டையுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆ! இதில் பெரிய பிரயோஜனம் உண்டு. ஏனென்றால், சிறுகாரியங்களில் கிடைக்கிற ஜெயம், அதைவிட பெரிய காரியங்களில் வெற்றிக்கு நம்மை தயார் செய்து அவைகளை கூடுமானதாகவும் செய்கின்றன. அதற்குமாறாக சிறு காரியங்களில் மாம்சத்தின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தோமானால், முழு போராட்டத்தினாலும் நிச்சயமாக தோற்றுப்போவோம் என்பதை அது குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாகயிருக்கிற நாம் சோத்திக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். (நமது சோதனைகள் ஏற்கனவே ஆரம்பமாகாதிருந்ததானால்) என்பதை அறிந்து ஜீவியத்தின் சிறு காரியங்களில் நாம் சுயவெறுப்பை அப்பியாசித்து, ஆகாரம், உடை, நடத்தை முதலியவைகளில் நமக்குள்ள இயற்கையான நமது மாம்சத்தின் அடங்கா ஆசைகளை அழித்தால்(சாகடித்தால்) மாத்திரம், ஆவியின் பிரகாரமாக நாம் பலமுள்ளவர்களாகி " ஜெயங்கொண்டவர்களாகக் கூடும் என்று தெளிவாக அறிந்துக் கொள்ள வேண்டும்."

**- Z '99, 172 (R 2492)**

நம்முடைய குற்றங்கள் பெரிதாக இருந்தாலும் சரி, சிறியதாக இருந்தாலும் சரி, அவைகள் நம்முடைய ஆவிக்குரிய கனித்திரளுக்குக் கெடுதி செய்கின்றன. இந்த நமது எண்ணம் அவைகளுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டத்தை நடத்த நம்மைத் தூண்ட வேண்டும். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணாமல், ஆனால் புத்திசாலித்தனமான முயற்சிகளினால் இந்தப் போராட்டத்தை நடத்த வேண்டும். நம்முடைய பற்றுதல்களை அவைகளிலிருந்து பிரிக்கிறதின் மூலமாகவும், அவைகளை வெறுப்பதின் மூலமாகவும், எதிர்ப்பின் மூலமாகவும், அவைகளை நாம் ஜெயிக்கலாம். அவைகளை எதிர்க்கும் போது, அவைகளை தாக்கவும் வேண்டும். அவைகளுடைய தாக்குதல்களை முறியடிக்கவும் வேண்டும். எதிரான குணசீலங்கள் மூலமாக அவைகளை பெயர்த்து வைப்பதின் மூலமாயும், தடை செய்வதின் மூலமாயும் நாம் அவைகளைத் தாக்குகிறோம். அவைகளிலிருந்து நமது கவனத்தைத் தாக்குகிறோம். அவைகளிலிருந்து நமது கவனத்தைத் திரும்புவதன் மூலமாகவும், அவைகள் ஊடுருவ முடியாத இருதயத்தையும் மனதையும் நிறுத்துவதின் மூலமாயும் அவைகளை நாம் முறியடிக்கிறோம். இவைகள் எல்லாவற்றையும் கர்த்தரின் ஆவியினால் நாம் செய்கிறோம்.

**- P '36, 95.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

2நாளா 12:14; நீதி 4:23; பி ர5:6; ஏசா 1:18; 44:20; எரே 17:9; எசே 20:15; மத் 12:31,33-35; 15:2-20; 1கொரி 5:6; எபே 2:1-5; எப13:13; 12:5; யாக் 1:14,15; 2:10,11; 4:1-3,17; 2பேது 1:4; 1யோவா 3:4-15; 5:17.

**கோபுர வாசிப்பு:** Z '16, 118 (R 5886)

**வினாக்கள் :** இந்த வாரத்தில் எனது தவறுகள் பற்றி நான் என்ன செய்தேன்? எப்படி? ஏன்? அதில் உதவியாயிருந்தது அல்லது இடையூறாயிருந்தது எது? பலாபலன்கள் எவை?